**CC.No**.30/2023

**Date**: 12.03.2026

**ம.சா. 1. மாதவன், த/பெ. முத்துகருப்பன், காரைக்குடி**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) நான் மின்சார வாரியத்தில் இருந்து எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 30.07.2015 ல் ஓய்வு பெற்றேன். நான் இந்த வழக்கில் யாரை எதிர் மனுதாரராக காண்பித்துள்ளேன் என்றால் பாஸ்கரன் என்பவரை காண்பித்துள்ளேன். எதிரியை எப்படி தெரியும் என்றால் எனது குடும்ப நண்பர் செல்வம் எனபவர் மூலமாக எனக்கு தெரியும். எதிரி மேற்படி செல்வத்தின் மைத்துனர் ஆவார். செல்வத்திற்கு சொந்த ஊர் மதுரை தற்போது சென்னையில் வசித்து வருகிறார். எதிரியை எந்த வருடத்தில் இருந்து தெரியும் என்றால் சுமார் 5 வருடத்திற்கு முன்பிருந்து தெரியும். எங்கு வைத்து நாங்கள் அறிமுகம் ஆனோம் என்றால் சென்னையில் செல்வத்தின் வீட்டில் வைத்து அறிமுகம் ஆனோம். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் ராயல் என்பீல்டு இருசக்கரத்தின் உதிரி பாகங்கள் பாலிஸ் செய்து வருகிறார். எந்த கம்பெனியின் பெயரில் மேற்படி தொழில் செய்து வருகிறார் என்றால் சீனிவாசன் என்ற பெயரில் செய்து வருகிறார் முழுப்பெயர் நினைவில்லை.**

**2) நான் எதிரி நடத்தி வரும் நிறுவனத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். மேற்படி எதிரி நடத்தி வரும் நிறுவனத்தில் நான் வரவு செலவு பார்ப்பேன் என்றால் சரியல்ல. பொழுதுபோக்கிற்காக உட்கார்ந்து இருப்பேன். எதிரி ஒரு ஆசிரமத்திற்கு வாரம் வாரம் உணவிற்காக ஒரு காசோலை கொடுப்பார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி என் மூலமாகத்தான் மேற்படி ஆசிரமத்திற்கு காசோலை மூலமாக பணம் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. நான் எனது புகாரில் எதிரிக்கு பணம் கொடுத்த விபரத்தை சொல்லியுள்ளேன் ஆனால் எதிரி எப்போது பணத்தை திருப்பி தரவேண்டும் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் 6**

மாதத்தில் பணத்தை திரும்ப தருவதாக என்னிடம் கூறினார். எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை அவ்வாறு நான் வாங்கியிருந்தால் நான் சரியான விபரத்தை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் பெற்ற கடன் தொகையை எனது வருமான வரி கணக்கில் காண்பித்து இருக்கிறேனா என்றால் நான் எனது லிமிட் தாண்டியதால் காண்பிக்கவில்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் என்ற இடத்தில் கம்பெனியின் பெயர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை நான் எதிர் மனுதாரராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நிறுவனத்தை நடத்துபவர்கள் அந்த நிறுவனத்தின் சார்பாக காசோலை அளித்தால் அந்த நிறுவனத்தையும் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை அவரது அவசர தேவைக்குத்தான் பணம் கொடுத்தேன்.

3) நான் எனது வழக்கில் வட்டி தொகை பற்றி குறிப்பிட்டு உள்ளது தவறு என்றால் நான் வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்திருந்தேன். அதைதான் குறிப்பிட்டுள்ளேன். மாதம் மாதம் எனது வங்கி கணக்கில் எதிரி பணம் செலுத்திய விபரத்தை நான் எனது வங்கி கணக்கில் சொல்லி, தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. எதிரி என்னிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றும், வாரம் வாரம் ஆஸ்ரமத்திற்காக கொடுக்கவேண்டிய பணத்திற்கான காசோலையை நான் தவறுதலாக பெற்று பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எந்த அவசர தேவையும் கிடையாது என்றாலும் அவரது தொழில் நல்ல முறையில் நடைபெற்று வந்ததால் எதிரி என்னிடம் கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும், முறையாக நிறுவனத்தை எதிரியாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எதிரி அந்த நிறுவனத்தின் உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு தொகையை எதிரி

**தரவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 16:07:47 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)